யாழ்ப்பாணம்

## ★ 9-ம் திகதி நாடாளுமன்றில் தெரிவுக்குழுவின் அறிக்கை

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 85 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 22 இதழ் 263
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 07 — 11 — 1993

(கொழும்பு)
வடக்கு கிழக்கும் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றதெரிவுக்குழுவின் இறுதி அறிக்கை எதிர்வரும் 9-ம் திகதி செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

(3-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கை பிரித்தே தெரிவுக்குழு சிபார்சு

(கொழும்பு)
வடக்கும், கிழக்கும் தனித் தனியாகப் பிரிக்கப்பட்டு இரு வெவ்வேறு நிர்வாக அமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்றே 9-ம் திகதி நாடாளுமன்றில் தெரிவுக்குழு தனது

(4-ம் பக்கம் பார்க்க)

## பெண் தற்கொலைப் படை கொழும்பில் ஊடுருவல்?

(கொழும்பு)
விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையைச் சேர்ந்த இரண்டு பெண்கள் கொழும்புக்குள் வந்துள்ளார்கள் என்றும் இவர்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறும் பாதுகாப்புப் படையினர் கூறியுள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் பல பகுதியிலும்

# தமிழரை படுகொலை செய்து வீதிகளில் போட அரசு திட்டம்!

## அதிகாரி ஒருவர் தகவல்

(கொழும்பு)
கொழும்பில் கடத்தப்படும் தமிழ் இளைஞர்களில் படையினர் சந்தேகிக்கும் இளைஞர்கள் பலரை தெரிவு செய்து சுட்டுக் கொன்றுவிட்டு வீதிகளில் போடுவதற்கும் அரசு தயாராயிருப்பதாக அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

(3-ம் பக்கம் பார்க்க)

## உணவுப் பொருள் அனுப்புவதில் மாற்றம் வருகிறது?

(கொழும்பு)
யாழ். குடாவிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை அனுப்பி வைப்பதில் சில மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.
இதேவேளை யாழ் குடாவில்

(2-ம் பக்கம் பார்க்க)

## கடத்திச் செல்லப்பட்ட 100 தமிழ் இளைஞரை காணவில்லை

(கொழும்பு)
கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கடத்தப்பட்டு காணாமல்போன தமிழ் இளைஞர்கள் பற்றிய விபரங்களை பல மனிதஉரிமை குழுக்கள் தீவிரமாக சேகரித்துவருகின்றன.
இதுவரை சுமார் 100 தமிழ் இளைஞர்கள் வரை கடத்தப்பட்டு காணாமல் போயிருக்கலாமென அங்கிருந்து வரும் செய்தியொன்று தெரிவித்துள்ளது.
இதேவேளை தமிழ் இளைஞர்கள் நேரகாலமின்றி தொடர்ந்தும் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையங்களிலும் படைமுகாம்களிலும் அடைக்கப்பட்டு வருவதாக

(4-ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தேர்தல்; அதிகாரிகள் தயக்கம்

(கொழும்பு)
கிழக்கு மாகாணத்தில் அடுத்த வருட முற்பகுதியில் அரசு நடாத்த உத்தேசித்துள்ள தேர்தல்களுக்கு அங்குள்ள பல அரச அதிகாரிகளும் தயக்கம் காட்டி வருகின்றார்களாம்.
எவ்வாறாவது அங்கு உள்ளூராட்சி சபை தேர்தலையும், சர்வஜன வாக்கெடுப்பையும் நடாத்த வேண்டுமென அரசு கங்கணம் கட்டி வருகிறதாம்.

(2-ம் பக்கம் பார்க்க)

## ● நாலாம் மாடியில்

## தலைகீழாக தொங்க விடப்பட்டு தமிழர் மீது கடும் தாக்குதல்

(கொழும்பு)
கொழும்பில் கைதான பல தமிழ் இளைஞர்கள் நாலாம் மாடிக்குக் கொண்டு செல்லப்பட்டு மிக மோசமான சித்திரவதைகளுக்குட்படுத்தப்பட்டு வருகிறார்கள். பெருமளவு தமிழ் இளைஞர்கள் நாலாம் மாடியில் தலைகீழாக பல மணி நேரம் தொங்கவிடப்பட்டு மிகமோசமாகத் தாக்கப்பட்டிருக்கின்றனர்.
இவ்வாறு அண்மையில் கொழும்பில் நான்கு தடவைக்கு மேல் படையினரால் கைது செய்யப்பட்டு நாலாம் மாடி வரை சென்று ஒருவாறு விடுதலையாகி வந்த 40 வயது நபர் ஒருவர் தெரிவித்தார்.
அவர் மேலும் கூறுகையில்: நாலு தடவை பிடிபட்ட போது ஒவ்வொரு முறையும்

(8-ம் பக்கம் பார்க்க)

## அரசியல் தலைவருக்கு கொலை மிரட்டல்

(கொழும்பு)
லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் திரு. பேர்னாட் சொய்சாவுக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் முக்கிய உறுப்பினர் திரு. பற்றி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.
இதேபோன்றே சிலாவிலி படுதோல்வி குறித்து இராணுவத்தினரை கடுமையாக சாடியுள்ள "சண்டே ரைம்ஸ்" பத்திரிகையாளர் திரு. இக்பால்

4-ம் பக்கம் பார்க்க

## யுத்தத்தில் பெரும் ஆதாயம்; படை தலைமைக்கு கிடைக்கிறது

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு யுத்தத்தில் தொடர்ந்தும் ஆதாயங்கள் பெறும் படை அதிகாரிகள் வடக்கு கிழக்கும் பிரச்னையை தீர்ப்பதற்கு விருப்பமாது இழுத்தடிக்கிறார்கள் என்று லங்கா சமசமாஜக் கட்சி உறுப்பினர் திரு பற்றி வீரக்கோன் தெரிவித்துள்ளார் என்று பி பி ஸி. சந்தேசிய தெரிவித்தது.
அவர் மேலும் கூறியதாவது ஜனாவிசம்பவத்தில் 117 படையினர் பலியாகினர் இவர்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

## ★ கூட்டுறவு பரிசோதகர் ஆட்சேர்ப்பு பரீட்சை நேற்று நடைபெறவில்லை

(யாழ்ப்பாணம்)
நேற்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறுவதாக இருந்த கூட்டுறவுப் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை நடைபெறவில்லை.
புதிதாக பரீட்சை நடைபெறுமெனவும் பரீட்சார்த்திகளுக்கு அறிவிக்கப்பட்டது.
நேற்றுக் காலை 9 மணிக்கு இப்பரீட்சை நடைபெறுவதாக இருந்தது. எனினும்

(4-ம் பக்கம் பார்க்க)

காற்றுக்கு கைவிலங்கு போடுவதில்லை
நிலவை சிறையில் போடுவதில்லை
ஈழத்தமிழனே !
உனக்குமட்டும் ஏன் அடிமை வாழ்வு
நினைத்துப் பார்த்து நெஞ்சை நிமிர்த்து.

## 660 ஏக்கர் தமிழர் நிலத்தில் வவுனியா பகுதியில் சிங்களக் குடியேற்றம்

(வவுனியா)
வவுனியா மாவட்டத்தில் ஆயிரம் வீட்டுத் திட்டம் என நான்கு இடங்களில் 660 ஏக்கர் நிலப்பரப்பில் சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ள தமிழர் நிலங்கள் வீடுகளுடன் சேர்த்து கவீகரிக்கப்பட்டுள்ளது.
செட்டி குளத்தில் 175 ஏக்கரும், வீரபுரத்தில் 350 ஏக்கரும் மா நம்பை குளத்தில் 125 ஏக்கரும், சாந்த சோலையில் 10 ஏக்கரும் என நாட்டு பிரச்னையால் அகதிகளாக வீடுகளைவிட்டு வெளியேறிய தமிழர்களின் நிலங்கள் சுவீகரிக்கப்பட்டுள்ளது
மேற்படி இடங்களில் கிரமமாக வரிசையில் முறையே 60 பேர்ச்

(3-ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### தீபாவளி வெளியீடுகள்

அக்டோபர் வியாழன், சனி, செவ்வாய் மாற்றப் பலன்களும் நவம்பர் சனி மாற்றப் பலன்களும், ரூ 10/-, பாடசாலை, அலுவலக உபகரணங்களும் விற்பனையாகின்றன. சோபிதா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (இ-567)

### (O/L) MATHS

G C E (O/L) க்கட்டாய பாடமாகிய கணிதபாடத்தில் இதுவரைசித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 26வருட அனுபவமுடைய ஆசிரியரால் 40 கணித்தியாலங்களில் Distinction பெறுபேறடைமை கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, ச்சேரி கிழக்கு ஒழுங்கை லோகேந்திரா வீதி, கண்டுக்குளி. (இ-560)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### விற்பனையாகின்றது

பாலாஜியின் விடுதலை புதிர்கள் 150. யாழ்ப்பாணத்தில் சகல புத்தகசாலைகளிலும், தர்க்கா சுன்னாகம், மொடன் (நவீன களஞ்சியம்) நெல்லியடி, சிவம் சாவகச்சேரி, பிக் பெக்ஸ் (B) கிளிநொச்சி. விலை: 20. (ஏ-3556)


### உணவுப்பொருள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உணவுப் பொருள் பற்றாக்குறையால் பொது மக்கள் பெரிதும் அவஸ்தைப்படுவதாக கொழும்பில் செய்திகள் பல வெளிவந்துள்ளன.

உணவுப் பொருள் அனுப்பப்படுவதில் எவ்வாறான மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் என அவ்வட்டாரங்கள் எதுவும் கூறவில்லை. (சி)

### கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இதன் பின்விளைவுகள் பற்றி அதிகாரிகள் கவலை கொண்டுள்ளனராம்.

இதேவேளை இத்தேர்தல்களுக்கான தகுந்த சூழ்நிலை உருவாகவில்லை என இராணுவ தரப்பில் கூறப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. -இ


# கேள்வி அறிவித்தல்

## யாழ் செயலகத் தேவைக்கான தளபாடங்கள் செய்து வழங்குதல்

மேற்படி வேலைக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

1. இவ்வேலை சம்பந்தமான முழு விபரங்களும் இச் செயலகத்தில் களஞ்சிய தலைபுக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.
2. அரசாங்கத்தில் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் மட்டும் கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கலாம்.
3. கேள்விப்படிவங்கள் மீளளிக்கப்படும் கட்டுப்பணமாக ரூபா 250/- செலுத்தி யாழ். அரசாங்க அதிபரிடமிருந்து 1993-11-08ஆம் திகதி தொடக்கம் 1993-11-12ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 10-00 மணி தொடக்கம் பி. ப. 2. 00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
4. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் யாழ். அரசாங்க அதிபர், மாவட்ட ஆணையாளர் செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிடப்பட்டு 19-11-1993ஆம் திகதி முற்பகல் 11-00 மணிக்கு முன்பாக கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபால் மூலமாக அல்லது அதற்கென இச்செயலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் இடவேண்டும்.
   கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும் வேலையின் பெயர் பத்திரம் அடங்கிய தபால் உறையின் இடதுபக்கத்தில் தெளிவாக குறிப்பிடப்படவேண்டும்.

கா. மாணிக்கவாசகர்
அரச அதிபரும்,
மாவட்ட ஆணையாளரும்,
யாழ்ப்பாண மாவட்டம்.

செயலகம்,
யாழ்ப்பாணம்.
05-11-1993.

(எ-3570)

# தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடத்தும்

# "3-வது" வதிவிட வேளாண்மைப் போட்டி

## 1993 / 1994 யாழ். மாவட்டம்

தமிழீழ விடுதலைப் போராட்டமானது பேரினவாத ஒடுக்குமுறைகளில் இருந்து எம் மக்களை விடுவிப்பதோடு மட்டும் நிற்கவில்லை. சார்ந்து நிற்கும் பொருளாதார நிலையில் இருந்து தமிழ் மக்களை விடுபடச் செய்து எமது சொந்த மண்ணில் சொந்தக்கால்களில் தங்கி நிற்கும் தன்னிறைவான பொருளாதார வாழ்வைக் கட்டி எழுப்புவதற்கு வழிவகுத்துள்ளது.

இப்பணியில் செயற்பட்டு வரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தமிழீழ மக்கள் அனைவருமே இன்று எதிர்கொண்டுள்ள பாரிய பொருளாதார சுமையினின்றும் விடுபட பல்வேறு செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயற்படுத்தி வருகிறது.

இவ்வாறாக வதிவிட வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்களை ஊக்கப்படுத்தும் விதமாகவும் இரண்டாவது முறையாக 1993/94 காலப் பகுதியில் யாழ். குடாநாட்டுக்குட்பட்ட குடியிருப்பாளர்களை உற்பத்தி முயற்சியில் ஈடுபடவைக்கும் வதிவிட வேளாண்மைப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே அனைத்து குடியிருப்பாளர்களும் தமது வீடு அமைந்துள்ள காணியில் அல்லது வதிவிடத்திற்கு அண்மையாக உள்ள 4 பரப்புக்குட்பட்ட காணியில் வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டு தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு பரிசில்களையும் பெற்றுக்கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வேண்டிக் கொள்கிறது.

போட்டிகளுக்கான நிபந்தனைகள்:-

01. வீடு அமைந்திருக்கும் வசதிக்கேற்ப வதிவிட பயிர்செய்கையை கவர்ச்சிகரமாக அமைத்தல்.

02. 10 அடி நீளமும் 3 அடி அகலமும் ஆன பாத்திகளில் உள்நாட்டு மரக்கறிப்பயிர்களான வெண்டி, மிளகாய், புடோல்(?), பாகல், கத்தரி, புடோல், பாகல், தக்காளி, பீர்க்கு, அவரைபோன்றவையும் மேல்நாட்டுமரக்கறிப்பயிர்களான போஞ்சி, முள்ளங்கி, பூக்கோவா, பீற்றூட், கரட் போன்றவையும் இவற்றுள் குறைந்தது (5) ஐந்து வகைபயிர் இனங்களில் (3) மூன்று உள்நாட்டு மரக்கறி வகைகளும் மேல்நாட்டு மரக்கறிவகைகளில் இரண்டும் (2) செய்கை பண்ணப்பட்டு இருத்தல் வேண்டும்.
    அத்துடன் மரவள்ளி வத்தாளை போன்ற கிழங்குவகை பயிர்களில் ஒன்று முக்கியமாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.
    சோளம், கம்பு, இறுங்கு போன்ற தானியப்பயிர்களில் ஏதாவது ஒன்று முக்கியமாக பயிரிடப்பட்டிருத்தல் வேண்டும்

03. 10 அடி நீளமும் 3 அடி அகலமுமான பாத்திகளில் இலைவகைகள் மரக்கறிப் பயிர்களானபொன்னாங்காணி, முளைக்கீரை, பசளி, சிறுகீரை, வல்லாரை, ஆகியவற்றில் குறைந்தது இரண்டுவகை இருத்தல் வேண்டும். அத்தோடு அகத்தி, முருங்கை, தூதுவளை, சண்டி, முசுட்டை ஆகியவற்றில் குறைந்தது இரண்டு இனமாதல் இருத்தல் வேண்டும்.

04. மஞ்சள், இஞ்சி, பெருஞ்சீரகம், வெந்தயம், மல்லி, கருவேப்பிலை, றம்பை, போன்ற இனங்களில் மூன்று (3) நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

05 பழ மரங்களான பப்பாசி, வாழை, மாக்கொய்யா, தோடை, மாதுளை, கொடித்தோடை, பலா, எலுமிச்சை, ஆகியவற்றுள் 4 மரங்கள் புதிதாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

06. பயனுள்ள மரங்களான தென்னை ஒன்று அல்லது கமுகு இரண்டு ஆகியவை புதிதாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

07. கூட்டெரு குழி முறையிலோ, குவியல் முறையிலோ, மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டும்.

08. தேனீ வளர்த்தல்:

    குறைந்தது ஓர் பெட்டியிலாவது அல்லது மரக் கொட்டுகளிலாவது வளர்ப்பில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

09. கோழி வளர்த்தல்:

    குறைந்தது (10) பத்து கோழிகள் (கூடு அமைப்பு) கூட்டுமுறையில் வளர்த்தல்வேண்டும்.

10. தாரா ஒரு சோடி வளர்த்தல்வேண்டும். அல்லது அதற்கு பதிலாக 5 கோழிகள் கூடுதலாக வளர்க்கவேண்டும்.

11. பசு மாடு ஒன்று அல்லது மறி ஆடு ஒன்று வளர்க்கப்படல்வேண்டும். இவை இரண்டையும் வளர்ப்பவர்களுக்கு கூடிய புள்ளிகள் வழங்கப்படும்.

12. முயல் குறைந்தது ஒரு சோடி வளர்க்கப்படல் வேண்டும்.

13. கிலங்கு தீவனமான புல்லினம். இப்பில் இப்பில், முள்முருக்கை, சீமைக்கிளுவை என்பன இருத்தல்வேண்டும்.

14. பதிவேடு பேணல்:

    மரக்கறி பயிர், கால்நடை வளர்ப்பிற்கானவை தனித்தனி பேணப்படல்வேண்டும்.

குறிப்பு:

விண்ணப்பப்படிவங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் யாழ். மாவட்ட செயலகம், கோட்டச் செயலகங்கள், கிராமிய உற்பத்திக்குழு வட்ட தொடர்பாளர்கள் அலுவலகங்களில் பெற்று பூரணப்படுத்தி 15-11-93ஆம் திகதி திங்கட்கிழமை நேரடியாகவோ அல்லது கடிதமூலமாகவோ மேற்குறித்த அலுவலகங்களில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலதிகமாகத் தேவைப்படும் விபரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன, மாவட்ட, கோட்ட, வட்ட அலுவலகங்களிலும், கமநல சேவைத் திணைக்களங்களிலும் விவசாய போதனாசிரியர்களிடமும் அரச சார்பற்ற நிறுவனங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மரக்கறி விதைகள் விண்ணப்பதாரிகளுக்கான பயிற்சிக் கூட்டத்தில் வைத்து இலவசமாக வழங்கப்படவுள்ளது.

இப்போட்டியில் கலந்துகொள்வோர் 15-11-93 தொடக்கம் 15-12-93 வரையுள்ள காலப்பகுதிக்குட்பட்ட நாட்களில் அனைத்துப் பயிர்களும் நாட்டப்பட்டிருத்தல்வேண்டும்.

போட்டிகள் பார்வையிடும் காலம்:

முதலாம் கட்டபார்வையிடுதல்
01-01-94 தொடக்கம் 20 01 1994 வரையுள்ள காலப்பகுதி
இரண்டாம் கட்ட பார்வையிடுதல்
01-02-1994 தொடக்கம் 15-02-1994 வரை
இறுதிக்கட்ட பார்வையிடுதல்
20-02-1994 தொடக்கம் 29-02-1994 வரை

(ஏ-3568)

யாழ்ப்பாணம்

மணிவாசகர்க்கு
நீ நிமிர்ந்து நிற்கும் வரை உன் நிழல் கோணலாக இருந்தாலும் அதுபற்றி கவலைப் படாதே.
- யோகசுவாமி

# நமது நோக்கு

## அமெரிக்க — இந்திய உறவு

ருஷ்யா இரண்டாவது பெரிய வல்லரசாக இருந்தபோது, இந்தியா அணிசேரா இயக்கத்தினை உருவாக்கிய நாடுகளில் ஒன்றாக விளங்கியது. ஆனால் சீன ஆக்கிரமிப்பின் விளைவாக இந்தியா ருஷ்யாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை உருவாக்கியது.

அமெரிக்கா சும்மா இருக்குமா? பலவித மறைமுக நெருக்கடிகளைக் கொடுத்து வந்தது ருஷ்யாவின் வல்லாதிக்கம் உடைக்கப்பட்டபின் இந்தியா நண்பர்களை இழந்து நிற்கிறது.

திறந்த பொருளாதாரக் கொள்கையை ஏற்றதன்மூலம் அமெரிக்காவின் நட்பை நாடி நின்றது.

அமெரிக்காவும் இந்தியாவை "வளைத்துப் போட", பாகிஸ்தான் மீது அழுத்தங்களைப் போட்டது. இஸ்லாமியச் செல்வாக்கை உடைத்தெறிய இந்தியாவின் நட்பை பயன்படுத்தப் போகின்றது என்றுதான் உலகம் நம்ப வைக்கப்பட்டது.

ஆனால், இறந்தகால வரலாற்றை அமெரிக்கா இலகுவில் மறந்துவிடுமா? கிழக்குப் பகுதியிலே வல்லரசு ஒன்றை வளர்த்திட உதவுமா?

உதவிடாது என்பதே பதில் என்று காட்டிடச் சில சம்பவங்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

விண்வெளிக்குச் செய்மதிக் கோள்களை அனுப்புவதற்கான ஒருக்கல் இயந்திரத்தை ருஷ்யாவிடமிருந்து பெற்றுவிட இந்தியா எடுத்த முயற்சி வெற்றிகரமாகத் தடுக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப ரீதியில் வளர்ந்து, இராணுவ பலத்தை அதிகரித்து வல்லரசு நிலைக்கு வளரும் முயற்சியை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடுவதே அமெரிக்க நோக்கம்!

இதனால், இந்தியா சீனாவுடனான தனது நட்பைப் பேணுவதற்காக பிரதமர் நரசிம்மராவ் சீனாவிற்கு விஜயம் மேற்கொண்டார். சில ஒப்பந்தங்கள் உருவாகின.

அமெரிக்கா வெறுமனே பார்த்துக் கொண்டிருக்குமோ?

இன்று, "காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியானது எப்படி? இது சட்டபூர்வமானதா?" என்ற கேள்விகள் அமெரிக்க அதிகாரிகளால் எழுப்பப்படுகின்றன.

வடஇந்திய மாநிலங்களில் சட்டசபைத் தேர்தல்கள் நடக்கும் வேளையில், காஷ்மீரின் எல்லைக்குள் இருக்கும் போராளிகளைச் சுற்றிவளைத்திருக்கும் வேளையில், அமெரிக்கா கேள்விகளை எழுப்பியிருக்கிறது.

இலங்கையும் சட்டபூர்வமான ஒரே நாடுதானா என்ற கேள்வி விரைவில் எழுப்பப்படாமலவா?

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். பாலர் கல்வி கழகம் நடாத்தும் பாலர் கலைவிழா இன்று 7-ம் திகதி ஞாயிறு பிற்பகல் 1 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மகளிர் அபிவிருத்தி நிலையம் நடாத்த இருக்கும் 'சமூகத்தில் புதிய பார்வையில் பெண்கள்' என்னும் கருத்தரங்கு இன்று 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 1-30 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் பங்கு கொள்வார் எனத் தெரியவருகிறது.

-162

## இராசிபலன்

7-11-1993

ஞாயிற்றுக்கிழமை
(தமிழுக்கு ஐப்பசி 22)

அட்டமி மு. இ. 7-15வரை. ஆயிலியம் ந. இ. 12-08வரை. மரணயோகம் இராகுகாலம் மாலை 4-35 முதல் 6-05 வரை. சுபநேரம் காலை 9-05 முதல் 10-35 வரை.

மேடம்- வீண் மனஸ்தாபம், குடும்ப கவலை, பணதுன்பம்.
இடபம்- மனைவியால் துயர், பணமுடை, காரியத்தடை.
மிதுனம்- தொழில் லாபங்கள், குடும்ப சுகம், பெரியோர் ஆதரவு
கடகம்- பெண்களால் சங்கடம், அலைச்சல், யோசனை.
சிங்கம்- தனலாபம், உறவினர் நன்மை, பாராட்டு.
கன்னி- புத்திர கஷ்டம், தொழில் நஷ்டம், புத்தி தடுமாற்றம்.
துலாம்- முயற்சி வெற்றி, இனசன வருகை, தெய்வீக செலவு
விருச்சிகம்- மாமனார் நன்மை, பயணம், காரிய சித்தி.
தனுசு- பகைவர் தொல்லை, அதிக வேலைப்பளு, பகட்டம்.
மகரம்- அபகீர்த்தி, மனவிரக்தி, குடும்ப பிரிவு.
கும்பம்- அதிகாரிகள் அனுகூலம், தானதர்மம், வெகுமதி.
மீனம்- தர்ம காரியம், திருமண வாய்ப்பு, அந்தஸ்து.

— ஜோஸ்யர்.

## கொழும்பில் பல

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறுகையில்: இந்த நடவடிக்கைகள் மூலம் ஜே.வி.பி யை இல்லாது ஒழித்தது போல் குறுகிய காலத்தில் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் புலிகள் எனப் பலரையும் ஒழித்துவிடலாம் என அரசு நம்புகிறது. அதற்காகவே இவ்வாறான நடவடிக்கைகளில் அரசு ஈடுபடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை அண்மைக்காலமாக கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் போவது குறித்து விசாரணை செய்ய அரசு தயக்கம் காட்டி மறுத்து வருகிறது.

தமிழ் இளைஞர்களை யார் பிடித்தார்கள்? எங்குகொண்டு சென்றார்கள் என விசாரணை மேற்கொள்ளப்பட்டால் அரசின் அனுசரணையுடன் திட்டமிட்டு இயங்கும் பிரத்தியேக ஆயுதக் குழுக்கள் பற்றி வெளியே தெரியவந்துவிடுமென அரசு அஞ்சுவதாகவும் 'மனித உரிமை இயக்கத்தைச்' சேர்ந்த ஒருவர் தெரிவித்ததாக கொழும்பிலிருந்து வெளியாகும் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது. (ஓ)

## நாலாம் மாடியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெருமளவு பணம்கொடுத்தே தப்பி வந்தேன் மூன்று முறையே கைவிலிருந்த மணிக்கூடு, மோதிரம் மற்றும் ஒரு தொகைப் பணத்தை இழந்தேன். நான்காம் முறை நான் பிடிபட்டு ட்ரக் ஒன்றில் ஏற்றப்பட்டபோது அதில் 30ற்கும் மேற்பட்ட தமிழர் இருந்தனர். அதில் அரைவாசிப் பேர் 40 வயதிற்கு மேற்பட்டோர்.

நாங்கள் 4-ம் மாடிக்குக் கொண்டு செல்லப்பட்டபோது அங்கு பல தமிழ் இளைஞர்கள் ஆடைகள் எதுவுமற்ற நிலையில் தலைகீழாக தொங்கவிடப்பட்டுத் தாக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். ஒரு சிலர் ஒரு காலில் மட்டுமே கட்டப்பட்டு தலைகீழாகத் தொங்கினர். பலர் தண்ணீர் கேட்டுக் கதறினர்.

எங்களுடன் வந்த ஒரு இளைஞனை 4-ம் மாடி இராணுவம் தலைமுடியில் பிடித்துச் சுவருடன் சேர்த்து மோதியதும் அவர் அப்படியே மயங்கி வீழ்ந்தார். ஏனையோரை உடனடியாக அப்புறப்படுத்தமாறு கூறப்பட்டது எங்களை தனித்தனியே கொண்டு சென்றபோது கும்பிட்டு மன்றாடி ஒரு தொகைப் பணத்தைக் கொடுத்து தப்பிவந்தேன் என கூறினார். -ஓ

## 660 ஏக்கர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

(275 வீடுகள்) 60 பேர்ச் 400 வீடுகள் 40 பேர்ச் (275 வீடுகள் 20 பேர்ச் (50 வீடுகள்) என ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இதில் குடியமர்த்தப்படுவோர் விவசாயம் செய்ய என 5 ஏக்கர் நிலம் (தமிழருக்கு சொந்தமானது) வழங்கப்படவுள்ளதாம் (ஓ)

## 9ம் திகதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)


இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இருந்து சகல தமிழ், முஸ்லீம் அமைப்புகளும் வெளியேறியபின்பு குழுவில் இருந்த சிங்களக் கட்சிகளின் தீர்மானம் தான் தெரிவுக் குழுவின் இறுதி அறிக்கையாக வெளிவருகின்றது என்று பி.பி.சி. 'சந்தேசிய' தெரிவித்தது

வடக்குகிழக்குப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு ஒன்றை முன்வைப்பதாக இருந்தால் வடக்கும் கிழக்கும் நிரந்தரமாக இணைவது முக்கியம் என்று தமிழர் அமைப்புகள் கூறி வருகின்றன

கிழக்கில் உள்ள சிங்கள, முஸ்லீம் மக்களுடைய பிரச்னைகள் இந்த ஒன்றிணைக்கப்பட்ட மாகாண சபைக்குள் பேசித் தீர்க்க முடியும் எனவும் தமிழ்க் கட்சிகள் கூறியுள்ளதும் தெரிந்ததே (ம-சி)


# விவசாயிகளே !
# தொழிற்சாலை உரிமையாளர்களே !
# இயந்திரப் பாவனையாளர்களே !

எங்கள் வளங்களில் எங்கள் கைகளில்
பெற்றோலிய எரிபொருள் பிரச்சனைக்கான
குறைந்த செலவில் மாற்றீடாக வருகின்றது.




" ஆக்கி வாயுப் பிறப்பாக்கி "

உங்கள்
★ நீரிறைக்கும் இயந்திரங்களை இயக்க
★ மின் பிறப்பாக்கியை இயக்க
மரக் கரி அல்லது சிரட்டைக் கரி மட்டுமே கொண்டு சக்தியைத் தரவல்லது தான்

ஆக்கிவாயு பிறப்பாக்கி

(தமிழீழத்தில் தொழில்துறை மேம்பாட்டு நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது)

இரகசியம் ஒன்றும் இல்லை !

ஆக்கி வாயுப் பிறப்பாக்கிகள் உங்களின் சக்தித் தேவைகளில் பெருமளவை நிறைவேற்ற வல்லது.

இவை சிரட்டை, மர கரிகளிலிருந்து உங்கள் பெற்றோல், மண்ணெண்ணை, டீசல் இயந்திரங்களை இயக்க வல்ல ஆக்கி வாயுவை உற்பத்தி செய்கின்றன.

★ உங்கள் இயந்திரத்தில் எதுவித மாற்றமும் செய்யாமலேயே ஆக்கி வாயுப் பிறப்பாக்கியை இணைத்து இயக்க முடியும்.

★ முதற் கட்டமாக வூல்ஸிலி (WOLSELEY) இயந்திரங்களுக்குப் பொருத்திக் கொள்ளலாம்.

பொருத்த வேண்டுமாயின் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

எல்லா நாட்களிலும் காலை 10-00 மணி முதல் பிற்பகல் 2-30 வரை ஆக்கி வாயுவில் இயந்திரம் இயங்குவதை எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்.

எமது அலுவலகம்: சக்திப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.
காங்கேசன்துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி.

(ஏ-3567)


அழிந்த வன வளங்களை மீள் வன மாக்குங்கள்

# பல பதவிகளுக்கு இன்று நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மத்திய அரசினால் கொழும்பில் நடாத்தப்படவிருந்த எழுதுவினைஞர்களுக்கான நேர்முகப் பரீட்சை யாழ். அரசாங்க அதிபர் மேற்கொண்ட முயற்சியை அடுத்து நேற்று யாழ். செயலகத்தில் நடாத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இன்று காலை முதல் தபால், அச்சக நீதிச்சேவை, ரயில்வே, ஆஸ்பத்திரி எழுதுவினைஞர்களும், கணக்குப் பதிவாளர், கிறுப்பர், ரயில் நிலைய அதிபர், களஞ்சியப் பொறுப்பாளர், ஆங்கில தமிழ் தட்டெழுத்தாளர்கள் என 60 பரீட்சார்த்திகளுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

இந்தப் பரீட்சார்த்திகள் கேட்கப்படவிருக்கும் ஆவணங்களின் இரு போட்டோப் பிரதிகள் நேர்முகப் பரீட்சையின்போது தம்முடன் எடுத்து வரவேண்டும் என்றும் அரச அதிபர் கேட்டுக்கொள்கிறார்.

(162-சி)

# இராணுவமும், பொலிஸும் இன்று தமிழரைக் கண்டு ஓடுகிறது

## - அமைச்சர் செல்லச்சாமி பெருமிதம் -

(கொழும்பு)

தமிழரைக் கண்டு இன்று இராணுவமும், பொலிசும் ஓடுகின்றது. இது குறித்து நாம் பெருமைப்பட வேண்டும் இவ்வாறு ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

தென்பகுதியில் இடம்பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றிலே அவர் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது: கடந்த காலங்களில் பொலிஸாரையோ இராணுவத்தையோ கண்டவுடன் தமிழர்கள் ஓடினார்கள் அந்த நிலை இன்று மாறி ராணுவத்தினரும் பொலிஸாரும் ஒரு தமிழனைக் கண்டவுடன் அவன் புலி எனப் பீதியடைகின்றனர். இது ஒரு பெரிய நடவடிக்கையாகும்.

தமிழர்களின் உறுதியான ஆற்றல் அவர்களது ஒற்றுமையில் தான் தங்கியுள்ளது. அந்த வலிமை எம்மிடம் இருக்கும்வரை எம்மை எவராலும் ஒன்றும் செய்ய முடியாது என்றும் அவர் கூறினார்.

(வி-சி)

# 'சிறிலின் மிரட்டலை கண்டிக்க 'ஐலண்ட்', 'திவயின' மறுப்பு

(கொழும்பு)

'சண்டே டைம்ஸ்' பத்திரிகையாளர் இக்பால் அத்தாஸ் என்பவருக்கு இராணுவ தளபதி சிசில் வைத்தியரத்ன விடுத்த கொலை மிரட்டலைக் கண்டித்து 'சுதந்திரப் பத்திரிகை இயக்கம்' வெளியிட்ட பத்திரிகை அறிக்கையினை, தேசத்தைக் காக்கப்போராடும் படையினருக்கு எதிராக செயற்படக் கூடாது எனக் கூறி 'ஐலண்ட்', 'திவயின' உட்பட சில பத்திரிகைகள் பிரசுரிக்க மறுத்துவிட்டனவாம்.

களாலி படுதோல்வி குறித்து கடும் விமர்சனம் செய்த இக்பால் அத்தாசை பத்திரிகையிலிருந்து நீக்க வேண்டும் இல்லாவிட்டால் அவரை ராணுவ பேசட்டு எச்சரிக்க வேண்டிவரும் என சிசில் வைத்தியரத்ன உரிமையாளரை எச்சரித்திருந்ததும் தெரிந்ததே -வி

## இந்தியாவில் கிரிக்கெட் இன்று ஆரம்பம்

(புதுடில்லி)

கான்பூரில் இன்று நடைபெறவிருக்கும் ஐந்து நாடுகள் பங்குபற்றும் ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியின் ஆரம்ப விழாவுக்கு இலங்கை அமைச்சர் திரு. டிரோன் பெர்னாண்டோ பிரதம அதிதியாக கலந்து கொள்கின்றார்.

இன்று, முதல் நாள் போட்டியில் இந்தியாவை எதிர்த்து இலங்கை மோதுகின்றது. இப்போட்டித் தொடரில் கலந்து கொள்ளப்போவதில்லை என பாகிஸ்தான் அறிவித்துள்ளது. (வி-இ)

## கப்பல் பயணிகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

'லங்காதுவ' கப்பலிலும், 'ருகுணு' கப்பலிலும் திருகோணமலைக்கும், கொழும்புக்கும் செல்வதற்கு அனுமதிக்கப்பட்ட பயணிகள் இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவில் தமது பெயர்களை உறுதி செய்யும்படியும் பருத்தித்துறை இறங்குதுறைக்கு பி. ப. 2 மணிக்கு சமுகமளிக்கும்படியும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (சி)

# வீரப்பனின் மனைவி பொலிஸாரால் கைது

(சென்னை)

இந்தியப் பொலிஸாரால் தீவிரமாகத் தேடப்பட்டு வரும் சந்தன மரக்கடத்தல்காரன் வீரப்பனின் மனைவி 26 வயது முத்துலட்சுமியை பொலிசார் நேற்றுக் கைதுசெய்தனர்.

கர்நாடக மாநிலத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் இடையே யுள்ள காட்டுப் பகுதியிலுள்ள மறைவிடத்தில் முத்துலட்சுமி பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்.

முத்துலட்சுமியிடம் பொலிசார் நடத்திய விசாரணையின் போது வீரப்பன் காட்டுப் பகுதியில் மறைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. -வி-சி

### கூட்டுறவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காலை விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை. குமண லப்பல் தாமதமாக வருவதால் பி. ப. 3 மணிக்கே பரீட்சை நடைபெறுமென அறிவிக்கப்பட்டது.

இதேவேளை இப் பரீட்சைக்கு 5,000க்கும் மேற்பட்டோர் யாழ். மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்திருந்த போதும் சுமார் 375 பேருக்கே அனுமதி அட்டைகள் வந்திருந்தன.

பி. ப. 3 மணிக்கு 375 பரீட்சார்த்திகளுக்கு மட்டுமே விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன. ஏனைய பரீட்சார்த்திகளும் பரீட்சை நிலையத்திற்கு வந்திருந்தனர்.

இதேவேளை இப் பரீட்சை தொடர்பாக யாழ். அரச அதிபருடனும், யாழ். கல்விப் பணிப்பாளருடனும் ஆலோசனை நடாத்தப்பட்ட பின் பரீட்சை விண்ணப்பதாரிகளின் வருகையில் ஏற்பட்ட தாமதத்தால் பரீட்சை நடைபெறவில்லையென கொழும்பிற்கு அறிவிக்கப்பட்டதுடன் பிறிதொரு தினத்தில் பரீட்சை நடத்த நடவடிக்கை எடுக்குமாறும் கோரப்பட்டுள்ளது. யாழ். வந்த விண்ணப்பதாரிகளும் கொழும்பிற்கு திருப்பி அனுப்பப்பட்டது. -சி

# இவ்வருட இறுதிக்குள் பெருமளவு ஆயுதம் கிடைக்கும்

(கொழும்பு)

இவ்வருட இறுதிக்குள் பெருமளவு இராணுவ தளபாடங்கள் கிடைக்கவுள்ளதாக இராணுவ தளபதி சிசில் வைத்தியரத்ன கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; இந்த ஆயுதங்களூடாக படையினருக்கு படை நடவடிக்கைகளுக்கு மேலதிக பலம் கிடைக்கும். இந்தப் பயங்கரவாதத்தை எம்மால் துடைத்தெறிய முடியும்.

இப்பணியில் எமது இராணுவத்தின் அதிகாரிகளும் ஏனையோரும் மிக உயரிய மட்டத்தில் தத்தமது பணியைச் செய்தவாறு உள்ளனர் எனவும் இராணுவ தளபதி கூறியுள்ளார். (இ)


வண்ணை மேற்கு
விளையாட்டுக் கழகம்
ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.

கரபந்தாட்ட
இறுதிப்போட்டியும்
ஆண்டு நிறைவு விழாவும்

காந்திஜி வி. க. A எதிர்
காந்திஜி வி. க. C
வண்ணை மேற்கு வி. க. B எதிர்
உடுவில் சென். மேரிஸ் வி. க.

07 - 11 - 1993 (இன்று) ஞாயிறு
பி. ப. 2-15 மணி

வாழ்த்துபவர்கள் :

எரிக் கனேஸ் — கண்ணாடி வழங்குபவர்கள்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சண்முகானந்தா — புடவையகம்
23, பெரியகடை, யாழ்ப்பாணம்.

லக்சுமி பாணகம்
(சிறந்த முறையில் பிஸ்கெட்—கேக் தயாரிப்பாளர்கள்)
ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.

★ அழகுசாதனப் பொருட்களை விரும்பிய முறையில் பெற்றிட
'ராஜன் அழகு சாதன அகம்'
46, மேற்கு சந்தை, யாழ்ப்பாணம்.
(பழைய சந்தை)

இ. தயாநிதி — பத்திரிகை ஏக விநியோகத்தர்
வண் வடமேற்கு, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.

★ பழைய — புதிய தளபாட வகைகள், வீட்டுப் பொருட்கள் வாங்குவதற்கு, விற்பதற்கு
பிறைற் ஏலவிற்பனவு நிலையம்
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

★ விவசாய மருந்து வகைகளுக்கும், உள்ளூர் பொருட்கள் விநியோகிப்பாளர்
"சிற்றிசன்"
19, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-581)


# யுத்தத்திற்கு தீர்வு யுத்தமே ஆகும்

(கொழும்பு)

வடக்கு—கிழக்கில் தொடரும் யுத்தத்திற்கு தீர்வு யுத்தமே ஆகும் என கலாநிதி ஜயதிஸ்ஸ த கொஸ்தா என்பவர் கூறியுள்ளார்.

இந்த யுத்தத்திற்கு அரசியல் தலைமைவென்று தேவை என்பதை நாம் ஏற்றுக்கொள்ளுகிறோம். ஆனாலும் யுத்தத்தை வழி நடத்த வேண்டியதும் அதனை திட்டமிடவேண்டியதும் அதற்கு கட்டளையிட வேண்டியதும் அரசியல்வாதிகளல்ல, முப்படைகளின் தளபதித் தலைவர்களாவர் என்றும் அவர் கூறியுள்ளார். —சி

# பம்பாய் படவுலகம் ஸ்தம்பித நிலையில்

(பம்பாய்)

பம்பாயில் சினிமாத்துறை ஊழியர்களின் வேலை நிறுத்தத்தில் பம்பாய் படவுலகம் ஸ்தம்பிதநிலை அடைந்துள்ளது.

சினிமாத் தயாரிப்பாளர்களுக்கும் அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்குமிடையில் சம்பளத் தகராறு காரணமாக கடந்த 3 நாட்களாக படவுலகம் ஸ்தம்பிதமடைந்துள்ளது.

பம்பாய் படவுலகம் ஒவ்வொரு வருடமும் சுமார் 110 படங்களைத் தயாரிப்பதன் மூலம் பல கோடி ரூபாய்களை சம்பாதிப்பதும் குறிப்பிடத்தக்கது. —இ

### அரசியல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அத்தாசுக்கும் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். —ம-சி

### வடக்கு கிழக்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இறுதி அறிக்கையில் சிபாரிசு செய்துள்ளது.

இவ்வாறு 'திவயின' பத்திரிகையாளர் லக்கபுர பி. பி. ஸி. 'சந்தேசய'வுக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் சர்வசன வாக்கெடுப்பு நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனால் கிழக்கில் வாழும் மக்கள் பெருமளவினர் இன்னமும் அகதி முகாம்களில் வாழ்கிறார்கள். பாதுகாப்பு ஏதும் இல்லாமல் சர்வசன வாக்கெடுப்பு நடாத்துவது ஒரு சுலபமான காரியமல்ல என்றும் கூறினார். —ம-சி

### யுத்தத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாதாரண படையினர் இராணுவ தலைமைக்கு இப்படியான இழப்புகள் ஏற்படவில்லை. இப்போது தான் இந்த யுத்தத்தினால் பொருளாதார ரீதியில் பல இழப்புகள் ஏற்பட்டுள்ளது என்று தகவல்கள் வருகின்றன.

வெளிநாடுகளில் ஆயுதங்கள் வேண்டும்போது "கொமிஷன்" இல்லாமல் பல கோடி ரூபாய்களை செலவிடுபவர்கள் இந்த சாதாரண படையினரல்ல. அவர்களுக்கு இந்தயுத்தம் தேவையில்லை இராணுவத் தலைமை தனது சுயஇலாபத்திற்காக அவர்களை பலி விடுகிறது என்றும் கூறினார். -ம-சி

### பெண் தற்கொலைப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜோசப் ஜெனட் ஜெயமணி நீக்கிலாபிள்ளை அமரநாயகி என்பவர்களே இந்த இரு பெண் தற்கொலைப்படையினர் என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்ததாக 'ரூபவாஹினி' தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

இவர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தற்போது படையினர் ஈடுபட்டுள்ளனராம். -ம-சி

### கடத்திச் செல்லப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

'ஏஜென்ஸி' செய்திகள் தெரிவித்தன.

பெரும் பாலும் பலர் அடிக்கடி கைது செய்யப்பட்டு பின் விடுவிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. (இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம், இலக்கம் 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு நவம்பர் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10 336/Bi